DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.9

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி.நேசம்மாள் | Caste: | |
| Husband's Name | : தானுவேல் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

11.07.2025 – 11.45 AM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. சேம்பரில் நான் 6 நாட்கள் வேலை செய்து அதற்கு ரூ.500/– சம்பளம் கொடுத்து அந்த பணம் போதுமாக இல்லை என்றும், எங்களுக்கு ரூ.40,000/–முன்பணமாக கொடுத்து அதில் எங்களுக்கு வர வேண்டிய சம்பளத்தில் வரவு வைத்துக் கொள்வார்கள் என்றும், முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அந்த சங்கதிகளை போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதே போன்று எங்களை வேலைக்கு அழைத்துச் சென்ற மேனேஜரை அடிக்கவும் பிரச்சனை ஏற்பட்டு அபிராமம் போலீசார் வந்து எங்களை விடுவித்ததாக போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. என்னை சேம்பரிலிருந்து எந்த அதிகாரிகள் வந்து அழைத்துச் சென்றார்கள் என்றால் அபிராமம் போலீசார் மட்டும் வந்து அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து என்னை மீட்ட பிறகு மீட்டதற்குண்டான சான்றிதழ் எனக்கு வழங்கப்பட்டதா என்றால் இல்லை. எனக்கு ரூ.20,000/–பணத்தை 1 மாதம் கழித்து கொடுத்தார்கள். அதை வாங்கியது குறித்து போலீசார் விசாரணையின் போது கூறியுள்ளேன். சேம்பரில் நான்

வேலை செய்தேன் என்பதை உறுதி செய்யும் விதமான ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

3. சேம்பரின் உரிமையாளர் யார் என்பதை காண்பிப்பதற்கும் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்./-திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.